இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்
இறுதிப் பரீட்சை **2006/2007** – முதலாம் கல்வித்தவணை
கல்வியின் அடிப்படைகள் - **ESP1202**

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

---

திகதி : 18.03.2007 நேரம் : மு.ப 9.30 – பி.ப. 12.30

---

பகுதி **I** இலிருந்து எல்லா வினாக்களுக்கும் பகுதி **II** இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

01. ஒருநாட்டில் சமூக வகுப்பு வேறுபாடுகளைக் குறைத்துக்கொள்ளத் திட்டமிட்டுச் செயற்படுத்தக்கூடிய ஒரு கல்விக்கொள்கையை முன்வைக்குக.

02. தமது பிள்ளைகளைச் சமூகமயப்படுத்தப் பெற்றோரால் பயன்படுத்தப்படும் இரண்டு நுட்பங்களைச் சுருக்கமாக விளக்குக.

03. “வாழ்க்கை நீடித்த கல்விக்கும் ஒரு கற்றற் சமூகத்துக்குமிடையே நெருங்கிய தொடர்புண்டு” – கருத்துரைக்க.

04. மகாத்மா காந்தியினது ‘நைத்தலிம்’ கல்விக் கொள்கையின் அடிப்படையாக விளங்கிய மூன்று பிரதான கோட்பாடுகளைக் குறிப்பிடுக.

05. ‘இன்று அபிவிருத்தி என்ற எண்ணக்கருவின் வரைவிலக்கணம் மாறிவிட்டது’ நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? உங்கள் விடைக்கு ஆதாரமாக இரண்டு காரணங்கள் தருக.

06. (அ) மனப்பாங்குகள் - விழுமியங்கள்
(ஆ) விழுமியங்கள் - நல்லொழுக்கத் தீர்மானம்
என்பவற்றிற்கிடையிலான தொடர்பினைப் பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக.

07. “திறந்த கல்வி என்பது சுவர்களற்ற கல்வியாகும்” - இலங்கையின் உயர் கல்வியைத் தொடர்புபடுத்தி இக்கூற்றுத் தொடர்பாகக் கருத்துரைக்க.

08. சகபாடிக் குழுவினர் கற்றலின் பின்வரும் மூன்று வகைகளையும் விளக்குக.
(i) கூட்டுக்குழுக் கற்றல்
(ii) சகபாடிக் கற்பித்தல்
(iii) சகபாடிகள் இணைந்து கற்றல்

## பகுதி II

09. (i) முறைசார் கல்விமுறைமை, முறைசாராக் கல்விமுறைமை, முறையில் கல்வி முறைமை என்பவற்றை வேறுபடுத்துக.

(ii) “முறைசார் கல்விமுறையில் அனுகூலங்கள் இருப்பதோடு பிரதிகூலங்களும் உள.” - கருத்துரைக்க.

(iii) இலங்கையின் முறைசாராக் கல்விமுறை நிகழ்ச்சித்திட்டங்கள் எத்துணையளவிற்கு முறைசார் கல்வியை நிறைவுசெய்கின்றன எனவும் முறைசார் கல்வியினூடாகப் பெற்ற கற்றலை வளமாக்குவதாக அமைந்துள்ளன எனவும் ஆராய்க.

10. (i) சமூகப் பெயர்ச்சியினை வரைவிலக்கணப்படுத்துக. பல்தலைமுறை இடைப்பெயர்ச்சி ஒருதலைமுறைப் பெயர்ச்சி இரண்டினையும் வேறுபடுத்துக.

(ii) தனிநபர்களது சமூகப் பெயர்ச்சியினை மேம்படுத்துவதில் கல்வியின் வகிபங்கினை ஆராய்க.

(iii) இலங்கையில் தனிநபர்களது சமூகப் பெயர்ச்சிக்குத் தடையாக விளங்கும் காரணிகளைப் பகுப்பாய்வு செய்க.

11. (i) முதனிலை சமூகமயப்படுத்தல், இரண்டாம்நிலைச் சமூகமயப்படுத்தல் இரண்டினதும் வரைவிலக்கணங்களைத் தருக.

(ii) சமூகமயமாக்கல் முகவர் என்ற வகையில் குடும்பத்தினது வகிபங்கினை ஆராய்க.

(iii) பாடசாலைக்குள்ளேயும் வெளியேயும் ஒத்த வயதுக் குழுவினரது சமூகமயமாக்கற் செயன்முறையின் முக்கியத்துவத்தைப் பகுப்பாய்வு செய்க.

12. (i) தத்துவம் என்பதன் இயல்பு யாது?

(ii) கல்வி என்பதற்கும் தத்துவம் என்பதற்கும் இடையிலான தொடர்பு யாது?

(iii) கல்வித்தத்துவவியலாளர்களில் எவரேனும் இருவரைத் தெரிவுசெய்து கற்றல்-கற்பித்தல் செயன்முறைகளின் மேம்பாட்டுக்கு அவர்களின் பங்களிப்புகளை வெவ்வேறாக விபரிக்க.

13. (i) இன்றைய பாடசாலைச் சமூகத்தில் ஒழுக்கத் தரங்கள் வீழ்ச்சியடைவதைத் துரிதப்படுத்தும் காரணிகளை ஆராய்க.

(ii) பிள்ளைகளிடம் விழுமியங்களை ஊட்டுவதில் ஆசிரியர்கள் எவ்வாறு உதவமுடியும் என்பதனை விளக்குக.

(iii) விழுமியக் கல்வியில் சமய அமைப்புகளினதும் பொதுசன ஊடகங்களினதும் வகிபங்கினை மதிப்பிடுக.

14. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு பற்றிக் கருத்துரைக்க.

(i) "தரம்வாய்ந்த கல்வியை வழங்குவதில் ஆசிரியர்களது கல்விசார் தரங்களையும் வாண்மைக்குரிய தரங்களையும் தற்காலத்திற்குக் கொண்டுவரல் கட்டாயமானதொன்றாகும்."

(ii) "நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் இடப்படும் தனித்தன்மைவாய்ந்த முதலீடே கல்வியாகும். இப்பிரதான கோட்பாடானது தேசியக்கல்விக் கொள்கையின் முக்கிய அம்சமாகும்."

(iii) "இலங்கையில் கல்வி பெற்றவர்களது உயர் வேலையின்மையானது தொழிற்சந்தைத் தேவைகட்கும் கல்விக்குமிடையே பொருத்தப்பாடில்லை என்பதற்குச் சான்றாகும்"

- பதிப்புரிமை உடையது -